# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## நிதி

**2003 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கும்; மோட்டார் வாகனங்கள் மீதான ஆடம்பர வரியையும், வாகன உரித்துடைமை அறவீட்டையும், வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீட்டையும், தனிசு மீள்கொடுப்பனவு அறவீட்டையும், காபன் வரியையும், செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டையும் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவை அறவீட்டையும் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் 2018, செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, ஓகத்து மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **264 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ச.வ.ஓ- 22/2017

**2003 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கும்; மோட்டார் வாகனங்கள் மீதான ஆடம்பர வரியையும், வாகன உரித்துடைமை அறவீட்டையும், வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீட்டையும், தனிசு மீள்கொடுப்பனவு அறவீட்டையும், காபன் வரியையும், செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டையும் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவை அறவீட்டையும் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துதல்

*2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (உல்லாசப் பயண அபிவிருத்தி அறவீட்டை விதித்தல்), 11 ஆம் பிரிவில் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

(1) பதினோராம் பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் இரண்டாவது காப்புவாசகத்தில், "மூன்று மில்லியன் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2018, செத்தெம்பர் 1 ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப் பகுதிக்கு, மூன்று மில்லியன் ரூபாவை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்பு வாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"ஆயின், மேலும், 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அத்தகைய அறவீடு, பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத வருடாந்த மொத்த விற்பனை வரவை அல்லது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத காலாண்டு மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அத்தகைய நிறுவனத்தின் அத்தகைய மொத்த விற்பனை வரவின்மீது 0.5 சதவீதத்தில் விதிக்கப்படுதல் வேண்டும்.";

(4) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு செத்தெம்பர் 1 ஆந் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அறவீடு எனவழைக்கப்பட வேண்டியதும், ஏதேனுமாண்டில் அத்தகைய நிறுவனங்களின் மொத்த விற்பனை வரவின் மீதுமான ஒரு சதவீத அறவீடொன்று அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அறவீடு, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட

பொது விற்பனை முகவர்கள் உட்பட, பயண முகவர் களிடமிருந்து விமானப் பயணச் சீட்டுக்களின் விற்பனை யுடன் இணைந்துள்ள தரகின்மீது விதிக்கப்படுதலா காது:

ஆயின், மேலும், அத்தகைய அறவீடு, பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத வருடாந்த மொத்த விற்பனை வரவை அல்லது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத காலாண்டு மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அத்த கைய நிறுவனத்தின் அத்தகைய மொத்த விற்பனை வரவின்மீது 0.5 சதவீதத்தில் விதிக்கப்படுதல் வேண் டும்.”; அத்துடன்

(5) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதி லாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

“சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்திச் சட்டத்தின் கீழும் சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின்கீழும் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின்மீது அறவீட்டை விதித்தல்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

“(2) இலங்கைச் சுற்றுலாப் பயணிச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு சேகரிக்கப்பட்ட அறவீட்டை, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக் கப்பட்ட தொடரிணைச் சுற்றுலாப்பயணத் தொழிற் படுத்துநர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அறவீடு தவிர, வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இரண்டாயிரத்தைந்தாமாண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்ட தொடரிணைச் சுற்றுலாப்பயணத் தொழிற்படுத்து நர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அறவீட்டைத் திரட்டு நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) இலங்கைச் சுற்றுலாப்பயணச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய தொகை சேகரிக்கப்பட்ட தேதியி லிருந்து முப்பது நாட்களினுள், அத்தகைய விபரத்திரட்டுக்களை, அதற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.".

## பாகம் II

### 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துதல்

2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** இரண்டாயிரத்தைந்தாமாண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை விதித்தல்), அதன் 7 ஆம் பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2016, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்கு 0.3 சத வீதப்படியும் ; அத்துடன்

(இ) 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு 0.3 சதவீதப்படியும்.".

## பாகம் III

### 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III ஐத் திருத்துதல்

*2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III (நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு), 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒவ்வோராண்டுக்காகவும், அத்தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வோராண்டுக்காகவும், 2015, திசெம்பர் 31 ஆந் தேதிவரை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் கொடுப்பனவை அத்தகைய நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரருக்கு 2009, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் செய்யுமிடத்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஏதேனும் கொடுப்பனவை அத்தகைய நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரருக்கு 2009, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2016, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் செய்யுமிடத்து" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**7**. இச்சட்டத்தின் இப்பாகத்தின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2016, சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

# பாகம் IV

## 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IV ஐத் திருத்துதல்

*2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**8**. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IV, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம், (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டம் (ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிப்பு), அதன் 18அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகள் அல்லது குறித்தசில தொழில்முயற்சிகள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை, அதன் 1 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"1. (சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கருத்துக்குட்பட பூச்சியத்தில் மதிப்பிடப்பட்ட செயற்பாடுகளாகக் கொள்ளப்படுவனவும் சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் அப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்தின்கீழ் பண்டங் களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவின் மீது அவற்றுக்காக ஏற்புடையனவாகவுள்ளனவுமான செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றவொரு தொழில்முயற்சி தவிர) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்;".

***10***. இச்சட்டத்தின் இப்பாகத்தின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*இப்பாகத்தின் ஏற்பாடுகளினது ஏற்புடைமை.*

## பாகம் V

### *1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II ஐத் திருத்துதல்*

***11***. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம், அதன் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''(ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பாரவண்டியொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அதன் முதலாவது பதிவாண்டு 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் வருமிடத்து, (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பாரவண்டியொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***12***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''(ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அதன் முதலாவது பதிவாண்டு 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் வருமிடத்து, (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "(பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் முதலாவது பதிவாண்டு 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் வருமிடத்து, (பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும்-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறவீட்டின் கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதி 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் வருகின்றதான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவு, "குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறவீட்டின் கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதி 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் வருகின்றதான குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 8ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பதிவு புதுப்பிக்கப்படும் நேரத்தில் அறவீடு சேகரிக்கப்படுதல் வேண்டும்.

8ஆ. (1) எந்தக் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தினது அறவீட்டின் கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதி 2018, செத்தெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் வருகின்றதோ, அந்தக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும்

மோட்டார் வாகனம் தொடர்பில் ஆண்டு அரசிறை உரிமமொன்றைப் புதுப்பிக்கின்ற ஒவ்வொரு பிரதேச செயலாளரும், ஆண்டு அரசிறை உரிமத்தைப் புதுப்பிக்கும் நேரத்தில், அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து அத்தகைய அறவீட்டுக்குச் சமமான தொகையொன்றைச் சேகரித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும்; அவர் அதனைத் திரட்டு நிதியத்துக்கு வரவுவைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறவீட்டைச் சேகரிக்கின்ற ஒவ்வொரு பிரதேச செயலாளரும், அவ்வாறு சேகரிக்கப்பட்டு திரட்டு நிதியத்துக்கு அனுப்பப்பட்ட அறவீடு தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும் அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ளதுமான மாதாந்த அறிக்கையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அறவீட்டைச் சேகரிக்கின்ற ஒவ்வொரு பிரதேச செயலாளரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், அவ்வாறு சேகரிக்கப்பட்ட அறவீடு பெறப்பட்டமையை முறையாக ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் பிரதேச செயலாளரினால் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு, அத்தகைய அறவீட்டை அத்தகைய பிரதேச செயலாளர் எத்தேதியன்று சேகரித்தாரோ அத்தேதியன்று ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

## பாகம் VI

### 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்

2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

(1) ''மாளிகை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், ''ஒரு கூட்டாட்சி ஆதனம் ஒன்றின் விடயத்தில், அத்தகைய ஆதனத்தின் கூட்டாட்சி ஆதனக்கூறு இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு கட்டிடமாகக் கணிக்கப்படுதலும் வேண்டும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனச் சிறுகூறொன்றை உள்ளடக்குதலாகாது;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) ''மாளிகை ஒன்றின் உரிமையாளர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், ''கூட்டாட்சி ஆதனமொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய ஆதனத்தின் கூட்டாட்சி ஆதன அலகொன்றின் உரிமையாளர்'' என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IX ஐ நீக்கிவிடுதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IX (மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் உரிமக் கட்டணம்), 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து இத்தால் நீக்கப்படுகின்றது.

## பாகம் VII

### மோட்டார் வாகனங்களின்மீது ஆடம்பர வரியை விதித்தல்

**19.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "வரி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஆடம்பர வரி" எனவழைக்கப்படவேண்டிய வரியொன்று, குறித்துரைக்கப்பட்ட எந்த மோட்டார் வாகனத்தின் மீது முதலாவது பதிவாண்டு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் வருகின்றதோ குறித்துரைக்கப்பட்ட அந்த ஒவ்வொரு மோட்டார் வாகனத்தின்மீதும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வீதங்களில் விதிக்கப்படுதல் வேண்டும். மோட்டார் வாகனங்களின் மீது ஆடம்பர வரியை விதித்தல்.

**20.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின்மீது 19 ஆம் பிரிவின் மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, இலங்கைச் சுங்கத்தி லிருந்து அத்தகைய வாகனத்தை அகற்றுகின்ற நேரத்தில், ஏதே னும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வாகனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான இறக்குமதித் தீர்வைகளுடன் சேர்த்து, அத்தகைய வாகனத்தை இறக்குமதி செய் கின்ற ஆளினால் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். இறக்குமதி செய்யும் நேரத்தில் வரியைச் சேகரித்தல்.

(2) ஏதேனும் சுங்கத் தீர்வையைச் சேகரிப்பதற்கும் அறவிடு வதற்கும் ஏற்புடையற்பாலனவான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான வரியைச் சேகரிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்புடையற்பாலன வாதல் வேண்டும்.

**21.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் இலங்கையி னுள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இலங்கையில் பொருத்தப் பட்ட குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின்மீது பதிவு செய்யும் நேரத்தில் வரியைச் சேகரித்தல்.

19 ஆம் பிரிவின் மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, அத்தகைய வாகனம் தொடர்பில் முதலாவது பதிவுச் சான்றிழை வழங்குகின்ற நேரத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்ட வரியைத் திரட்டு நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

குறித்தசில வாகனங்களுக்கு வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**22.** இப்பாகத்திலுள்ளதெதுவும், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின்கருத்துக்குட்பட ஏதேனும் அரசின் ஒரு தூதுக் குழுவுக்கு அல்லது அச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வதேச, பல்புடை அல்லது இருபுடை ஒழுங்கமைப்பொன்றுக்குச் சேவைகளை வழங்குகின்ற குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

பொருள் கோடல்.

**23.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்பது, எந்தப் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாத டீசல் மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 2,300 சீ.சீ யை விஞ்சுகின்றதோ அந்த ஏதேனும் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாத மோட்டார் வாகனம்

அல்லது எந்தப் பெற்றோல் மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 1800 சீ.சீ யை விஞ்சுகின்றதோ அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனம் ஒன்று அல்லது எந்த மின்சார வாகனத்தின் என்ஜின் மோட்டார் சக்தி 200 கிலோவோட்டை விஞ்சுகின்றதோ அந்த மின்சார வாகனம் ஒன்று என்று பொருளாகும், ஆனால் எந்த இரட்டை நோக்கப் பெற்றோல் மோட்டார் வாகனத்தின் உருளைக் கொள்ளளவு 2,200 சீ. சீ. யை விஞ்சாதுள்ளதோ அந்த இரட்டை நோக்கப் பெற்றோல் மோட்டார் வாகனத்தை, இரட்டை நோக்க மின்சார மோட்டார் வாகனத்தை, ஒரு வானை, ஒரு தனிக் கப் வண்டியை அல்லது ஒரு பாரவண்டியை உள்ளடக்காது.

## பாகம் VIII

### வாகன உரித்துடைமை அறவீடு

*வாகன உரித்துடைமை அறவீட்டை விதித்தல்.*

**24.** இதற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றை இறக்குமதிசெய்கின்ற மோட்டார் வாகனங்களின் ஒவ்வோர் இறக்குமதியாளரிடமிருந்தும் (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) “வாகன உரித்துடைமை அறவீடு ” எனவழைக்கப்படவேண்டியதுமான அறவீடொன்று, ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின்கீழ் இனங்காணப்பட்ட ஒவ்வொரு வகுதியினதுமான வாகனத்துக்கும் அட்டவணையிற்றரப்பட்டுள்ள முறையான வீதங்களில் 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து விதிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பொருத்தப்படாத வடிவத்தில் அத்தகைய வாகனமொன்றை இறக்குமதி செய்கின்ற வாகன இறக்குமதியாளரொருவர், அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்குகின்ற தேதி வரையானதுமான காலப் பகுதிக்காக அறவீட்டைச் சேகரித்தல்.

**25.** (1) இரண்டாயிரத்துப்பதினாறாமாண்டு சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் ஆனால் இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு முன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப் பகுதிக்காகச் செலுத்தப்படற்பாலதான அறவீடு, இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் தொடர்பிலான கடன்பத்திரம் எந்த வங்கியில் திறக்கப்படுகின்றதோ அந்த வங்கியினால், அத்தகைய கடன் பத்திரம் திறக்கப்படுகின்ற நேரத்தில் சேகரிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் மாதத்தின் 1 ஆம் நாளன்று தொடங்கி அம்மாதத்தின் 15 ஆம் நாள் வரையிலான காலப் பகுதியினுள் வங்கியினால் சேகரிக்கப்பட்ட அறவீடு அம்மாதத்தின் முடிவில் அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் மாதத்தின் 16 ஆம் நாளன்று தொடங்கி அம்மாதத்தின் முடிவு வரையிலான காலப் பகுதியினுள் வங்கியினால் சேகரிக்கப்பட்ட அறவீடு அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவீட்டை அனுப்புகின்ற ஒவ்வொரு வங்கியும் பின்வருவனவற்றை எடுத்துக்கூறி ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கூற்றொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) ஒவ்வோர் அனுப்பு தொகையும் தொடர்பாக ஒவ்வோர் இறக்குமதியாளரினதும் பெயரும் முகவரியும்;

(ஆ) வாகனத்தின் முகவரி;

(இ) கடன்பத்திரத்தின் பெறுமதி;

(ஈ) சேகரிக்கப்பட்ட தொகை; அத்துடன்

(உ) காலத்துக்குக்காலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான வேறெவையேனும் விபரங்கள்.

(4) எவரேனும் இறக்குமதியாளரிடமிருந்து அறவீட்டைச் சேகரிக்கும் ஏதேனும் வங்கி, அறவீடு செலுத்தப்பட்டுள்ளதெனச் சான்றுப்படுத்தி அத்தகைய இறக்குமதியாளருக்குக் கடன்பத்திரத்தின் பிரதியொன்றை வழங்குதல் வேண்டும். 2016, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் திறக்கப்பட்ட கடன்பத்திரத்தின் மீது இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் வாகனம், வங்கியினால் புறக்குறிப்பிடப்பட்ட கடன்பத்திரத்தின் பிரதியை இறக்குமதியாளர் சமர்ப்பித்தாலொழிய, இலங்கைச் சுங்கத்திலிருந்து அகற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(5) கடன்பத்திரம் இல்லாதாக்கப்பட்டு அத்தகைய கடன்பத்திரத்தின்மீது அறவீட்டைச் செலுத்தியுள்ள இறக்குமதியாளரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய அறவீடு அனுப்பப்படுமுன்னர் மீளளிப்பொன்று கோரப்படும் பட்சத்தில், அவ்வாறு செலுத்தப்பட்ட அறவீட்டை வங்கியானது மீளளிக்கலாம்.

**இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்காக அறவீட்டைச் சேகரித்தல்.**

**26.** (1) இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் வாகனத்தின்மீது இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக 24 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வாகனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான இறக்குமதித் தீர்வைகளுடன் சேர்த்து, இலங்கைச் சுங்கத்திலிருந்து அவ்வாகனத்தை அகற்றுகின்ற நேரத்தில், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வாகனத்தின் இறக்குமதியாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) அறவீடு செலுத்தப்பட்டதன்மேல், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில், "வாகன உரித்துடைமைச் சான்றிதழ்" எனவழைக்கப்படும் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) ஏதேனும் சுங்கத்தீர்வையைச் சேகரிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்புடையனவாகவுள்ள (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இப்பாகத்தின்கீழான அறவீட்டின் சேகரிப்புக்கும் அறவீட்டுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

குறித்தசில வாகனங்களுக்கு அறவீட்டின் கொடுப்பன விலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

**27**. இப்பாகத்திலுள்ளதெதுவும், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் அரசின் ஒரு தூதுக்குழுவுக்கு அல்லது அச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்றங்கீகரிக்கப்பட்ட சர்வதேச, பல்புடை அல்லது இருபுடை ஒழுங்கமைப்பொன்றுக்குச் சேவைகள் வழங்குவதற்காக இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

செல்லுபடியாக்கல்.

**28**. ஒரு மோட்டார் வாகனத்தை இறக்குமதிசெய்கின்ற எவரேனுமாளிடமிருந்து, 2016, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர்களின் சார்பில் 24 ஆம் பிரிவின்கீழான அத்தகைய தொகையினதான அறவீடு சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்கங்களுக்காகவும் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றது.

பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அறவீட்டின் வீதங்களைத் திருத்துதல்.

**29**. பாராளுமன்றம், தீர்மானத்தின்மூலம், 24 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதும் இதற்கான முதலாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ளதுமான அறவீட்டின் வீதங்களைத் திருத்தலாம்.

**பொருள்கோடல்.**

**30**. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

" "வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று என்று பொருளாகும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.".

## பாகம் IX

### வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீடு

**வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீட்டை விதித்தல்.**

**31**. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்காகவும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கம்பெனியிடமிருந்தும், இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒவ்வொரு வகுதியினதுமான கம்பெனிக் காகவும் குறித்துரைக்கப்பட்டவாறான முறையான வீதங்களில் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "அறவீடு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீடு" எனவழைக்கப்படவேண்டிய அறவீடொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) கரைகடந்த கம்பெனியொன்றுக்கு; அத்துடன்

(ஆ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனி யொன்றுக்கு,

ஏற்புடையனவாதலாகாது.

(2) அறவீடானது, ஒவ்வோர் இயைபான கம்பெனியினாலும், அதன் வருடாந்த விபரத்திரட்டுக்களைக் கோப்பிடும் நேரத்தில், விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் கம்பெனிகள் பதிவாளரினால் சேகரிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய சேகரிப்புத் தேதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்துக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

குறித்தசில கம்பெனிகளுக்கு அறவீட்டுக் கொடுப்பன விலிருந்து விலக்களிக் கப்படுதல் வேண்டும்.

**32.** முப்பத்தோராம் பிரிவின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2018, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2018, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி, 2018, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஆண்டுக்கான அறவீட்டைச் செலுத்துவதற்குப் பொறுப்பாதலாகாது.

அறவீட்டின் கொடுப்பனவில் தவணை தவறுதல்.

**33.** (1) முப்பத்தோராம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அறவீட்டைச் செலுத்துவதற்குத் தவறுகின்ற ஏதேனும் கம்பெனி, இச்சட்டத்தின்கீழ் தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏதேனும் தவணைதவறியவருக்கெதிரான குற்றவழக்குக்கும் அது தொடர்பாகவும், அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்காகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அறவிடுதல்.*

**34.** (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவணை தவறுகையிலுள்ளவிடத்து, கம்பெனிகள் பதிவாளர், தவணை தவறுகையிலுள்ள தொகை பற்றிய விபரங்களையும் கம்பெனியின் பெயரையும் முகவரியையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) நீதிவான், அதன்மேல், தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்கான வழக்குநடவடிக்கைகள் தவணைதவறியவருக்கெதிராக ஏன் எடுக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைக் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்.

(3) தவணைதவறியவரினால் போதிய காரணம் காட்டப் படாவிடின், தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகை, அத்தகைய தவணைதவறியவருக்கு நீதிவானினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று நீதிவானின் கட்டளைமூலம் அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அறவிடப்பட்டபோது, திரட்டுநிதியத்துக்கு வரவுவைக்கப்படுவதற்குக் கம்பெனிகள் பதிவாளருக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

*பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அறவீட்டின் வீதங்களை திருத்துதல்.*

**35.** பாராளுமன்றம், தீர்மானத்தின்மூலம், 31 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதும் இதற்கான இரண்டாம் அட்டவணை யிற்றரப்பட்டுள்ளதுமான அறவீட்டின் வீதங்களைத் திருத்தலாம்.

## பாகம் X

### தனிசு மீள்கொடுப்பனவு அறவீடு

*தனிசு மீள்கொடுப்பனவு அறவீட்டை விதித்தல்.*

**36.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு மாதத்துக்காகவும், ஒவ்வொரு நிதி நிறுவனத் திடமிருந்தும், அத்தகைய ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நிதிசார் சேவைகளின் வழங்குகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான பெறுமதிச் சேர்ப்பின்மீது (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் “அறவீடு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “தனிசு மீள்கொடுப்பனவு அறவீடு” எனவழைக்கப்படவேண்டிய 7 சதவீத அறவீடொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

(2) நிதிசார் சேவைகளின் வழங்குகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அத்தகைய பெறுமதிச் சேர்ப்பு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்றிக்கூறப்படற்பாலதான முறையை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாதத்துக்குமான அறவீடு, இயைபான மாதத்தை அடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய அனுப்புதொகை தொடர்பிலான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய கூற்றுடன் சேர்த்து, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) நிதிநிறுவனமொன்று, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை அனுப்பும்போது, ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ள விபரத்திரட்டொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

அறவீட்டிலிருந்தான விலக்களிப்பு.

**37**. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கமைய, இப்பாகத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுக் கொடுப்பனவிலிருந்து அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனமொன்றின் ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்கு விலக்களிக்கலாம்.

அறவீட்டின் கொடுப்பனவிலான தவணை தவறுகை.

**38**. (1) இப்பாகத்தின்கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள ஏதேனும் நிதிநிறுவனம் 36 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அறவீட்டைச் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய நிதிநிறுவனம் இச்சட்டத்தின்கீழ் தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்து பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் IX, அத்தியாயம் XI, அத்தியாயம் XII, அத்தியாயம் XIII, அத்தியாயம் XIV, அத்தியாயம் XV, அத்தியாயம் XVI, அத்தியாயம் XVII மற்றும் அத்தியாயம் XVIII என்பவற்றின் ஏற்பாடுகள், அத்தகைய ஏதேனும் தவணைதவறிய நிதிநிறுவனத்துக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**39**. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப் பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"நிதிநிறுவனம்" என்பது,-

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பெனி,

என்று பொருளாகும்.

## பாகம் XI

### காபன் வரி

காபன் வரியை விதித்தல்.

**40**. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும், இதற்கான மூன்றாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மோட்டார் வாகனத்தினதும்

பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''வரி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''காபன் வரி''யென அழைக்கப்படவேண்டிய வரியொன்று, அவ்வட்டவணை யிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட வரியானது, ஏதேனும் மின்சார வாகனத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் வரியைச் செலுத்துதல்.

**41.** (1) ஏதேனும் இயைபான வாகனத்தின் சொந்தக்காரர், அத்தகைய மோட்டார் வாகனத்தின் முதலாவது பதிவாண்டுக்காகத் தவிர, ஒவ்வோராண்டுக்குமான வரியை வருடாந்தப் பதிவின் புதுப்பித்தலுக்காக உரிய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பிரதேச செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் தொகையைச் சேகரிக்கின்ற ஒவ்வொரு பிரதேச செயலாளரும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட அறவீடு பெறப்பட்டமையை முறையாக ஒப்புக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் அத்தகைய தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அறவீட்டைச் சேகரிப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் வரிவீதங்களைத் திருத்துதல்.

**42.** பாராளுமன்றம், தீர்மானத்தின்மூலம், 40 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலவையும் இதற்கான மூன்றாம் அட்டவணை யிற்றரப்பட்டுள்ளவையுமான வரிவீதங்களைத் திருத்தலாம்.

பொருள்கோடல்.

**43.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய ''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

## பாகம் XII

### செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீடு

செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டை விதித்தல்.

**44.** (1) செல்லிடத் தொலைபேசிக் கோபுரமொன்றைச் சொந்தமாக வைத்திருக்கின்ற ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநரிடமிருந்தும் 2019, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும், ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசிக் கோபுரத்துக்காகவும் ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாவானதும் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''அறவீடு'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) ''செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீடு'' எனவழைக்கப்படவேண்டியது மான அறவீடொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) அறவீடானது அத்தகைய செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநரினால் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு முறையே நான்கு சமமான தவணைப்பணங்களில் பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) முதலாவது தவணைப்பணம் இயைபான ஆண்டின் ஏப்பிறல் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ஆ) இரண்டாவது தவணைப்பணம் இயைபான ஆண்டின் யூலை பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்;

(இ) மூன்றாவது தவணைப்பணம் இயைபான ஆண்டின் ஒற்றோபர் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ஈ) நான்காவது தவணைப்பணம் இயைபான ஆண்டை அடுத்துப்பின்வரும் ஆண்டின் சனவரி பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்.

(3) ஆணைக்குழுவானது அவ்வாறு சேகரிக்கப்பட்ட அறவீட்டுத் தொகையைச் சேகரிப்புத் தேதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டுநிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

*அறவீட்டுக் கொடுப்பனவில் தவணை தவறுதல்.*

**45.** (1) நாற்பத்திநான்காம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அறவீட்டைச் செலுத்தத் தவறுகின்ற எவரேனும் செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநர் இச்சட்டத்தின்கீழ் தவணை தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய எவரேனும் தவணைதவறியவருக்கெதிரான குற்றவழக்குக்கும் அது தொடர்பாகவும் தவணைதவறிய அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்காகவும் 46 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அறவிடுதல்.*

**46.** (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவணை தவறுகையிலுள்ளவிடத்து, ஆணைக்குழு, தவணைதவறுகையிலுள்ள தொகை பற்றிய விபரங்களையும் தவணைதவறியவரின் கடைசியாக அறியப்பட்ட வதிவிடத்தின் அல்லது தொழிலிடத்தின் பெயரையும் முகவரியையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) நீதிவான், அதன்மேல், தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்கான வழக்குநடவடிக்கைகள் தவணைதவறியவருக்கெதிராக ஏன் எடுக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைக் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்.

(3) தவணைதவறியவரினால் போதிய காரணம்காட்டப்படா விடின், தவணைதவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகை, அத்தகைய தவணைதவறியவருக்கு நீதிவானினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று நீதிவானின் கட்டளைமூலம் அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அறவிடப்பட்டபோது, திரட்டுநிதியத்துக்கு வரவுவைக்கப்படுவதற்கு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

***47.*** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய - பொருள்கோடல்.

''செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநர்'' என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு தொழிற்படுத்துநர் என்று பொருளாகும்;

''செல்லிடத் தொலைபேசிக் கோபுரம்'' என்பது, உணர்கொம்புகள் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடற் சாதனங்கள் இடப்பட்டுள்ள செல்லிடத் தொலைபேசி அமைவிடம் என்று பொருளாகும்;

''தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு'' என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழு என்று பொருளாகும்.

## பாகம் XIII

### செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகள்மீதான அறவீட்டை விதித்தல்

***48.*** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகளினூடாக அனுப்பப்பட்ட பெருந்தொகையான விளம்பரங்களின்மீது, ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திக்காகவும் 25 சத அறவீடு விதிக்கப்படுதல் வேண்டும்.

செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகள் மீதான அறவீட்டை விதித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அறவீடு எந்தச் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி தொடர்பில் விதிக்கப்படுகின்றதோ அந்தச் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ் செய்தியினூடாக விளம்பரஞ்செய்வதற்கு உட்கருதுகின்ற விளம்பரப்படுத்துநரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அறவீட்டைச் சேகரித்தல் மற்றும் அறவிடுதல் பற்றிய முறையைக் குறித்துரைக்கின்றவையும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கானவையுமான ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**49**. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி" என்பது, செல்லிடத் தொலைபேசிகளினூடாக அனுப்பப்பட்டவொரு செய்தி என்று பொருளாகும்;

"பெருந்தொகையான விளம்பரங்கள்" என்பது, வர்த்தக நோக்கங்களுக்காக ஒரு தொகுதியினரான பெறுநர்களுக்குச் செல்லிடத் தொலைபேசிகளினூடாக அனுப்பப்படுகின்ற செய்திகள் என்று பொருளாகும்.

## பாகம் XIV

### பொது

ஆட்கள் குழுவினாலான தவணை தவறுகை.

**50**. (1) இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டவோர் அறவீட்டின் அல்லது வரியின் கொடுப்பனவிலான தவணைதவறுகை ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அவ்வாட்கள் குழு

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும்; அல்லது

(ஆ) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அக்குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் அலுவலரும்

இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய அறவீட்டை அல்லது வரியை அறவிடுவதற்காகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

**51.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்குவிதிகள்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு மென்பதுடன் அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**52.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

[பிரிவு 24]

## முதலாம் அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| | சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின்கீழ் இனங்காணப்பட்ட வாகனங்களின் வகுதி | | வீதம் (ரூபா/வாகனமொன்றுக்கு) |
| 1 | முச்சக்கரவண்டிகள், கை உழவுயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் | | 2,000 |
| 2 | (அ) | விடயம் 1இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வாகனங்கள் தவிர ஆட்களை இடம் பெயர்ப்பதற்குப் பிரதானமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார் கார்களும் ஏனைய மோட்டார் வாகனங்களும் | 15,000 |
| | (ஆ) | குழுவினர் கப்வண்டி, இரட்டைக் கப் வண்டி மற்றும் சரக்கேற்றும் வான் | |
| 3 | பின்வரும் வாகனங்கள் மேலேயுள்ள விடயங்கள் 1 மற்றும் 2 இனால் மேவப்படுவதில்லை. | | |
| | (அ) | ஆட்களை அல்லது பண்டங்களை இடம் பெயர்ப்பதற்காகப் பிரதானமாக வடிவமைக்கப்பட்டவை தவிர்ந்த விசேட நோக்க வாகனங்கள் | |
| | (ஆ) | மோட்டார் மயமாக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி அல்லது வேறுவகையில் பொறிமுறையில் உந்தப்பட்டனவாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி அங்கவீனமுற்ற ஆட்களுக்கான படிநிலைப் பயண வண்டிகள் | 10,000 |

[பிரிவு 31]

## இரண்டாம் அட்டவணை

| கம்பெனியின் வகுதி | வீதம் (ஆண்டொன்றுக்கு ரூபா) |
|---|---|
| தனியார் கம்பெனி | 30,000 |
| நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி | 1,500,000 |
| வேறேதேனும் கம்பெனி | 250,000 |

[பிரிவு 40]

## மூன்றாம் அட்டவணை

| வாகனத்தின் வகுதி | வீதம் (ரூபா) | | |
|---|---|---|---|
| | 5ஆண்டுகளுக்குக் குறைவாக | 5 முதல் 10 ஆண்டுகள் வரை | 10 ஆண்டுகளுக்கு மேல் |
| கலப்புப் பொறிமுறை (பெற்றோல்/டீசல்) | $cm^3$ ஒன்றுக்கு 0.25 | $cm^3$ ஒன்றுக்கு 0.50 | $cm^3$ ஒன்றுக்கு 1.00 |
| எரிபொருள் (பெற்றோல்/டீசல்) | $cm^3$ ஒன்றுக்கு 0.50 | $cm^3$ ஒன்றுக்கு 1.00 | $cm^3$ ஒன்றுக்கு 1.50 |
| பயணிகளுக்கான பஸ்வண்டி | ரூபா 1,000 | ரூபா 2,000 | ரூபா 3,000 |